தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஆடி 15, தாரண — திருவள்ளுவர் ஆண்டு 2035

2004 ஜூலை 30, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. அ. அருணாசலம் *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:

"துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை"

இன்பம் தரக்கூடிய செயல் என்பது, துன்பம் வந்தாலும் அதனைப் பொருட்படுத்தாமல் துணிவுடன் நிறைவேற்றி முடிக்கக் கூடியதேயாகும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள். வினா எண் 81, திரு. ப. இளவழகன், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.*

81—

தூர் வாருதல்

***948—திரு. ப. இளவழகன்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வ்ருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரியலூர் தொகுதி, புள்ளம்பாடி கால்வாய் தூர்வாரும் பணி நடைபெற அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

நடை நடை

[2004 ஜூலை 30

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே.

ஏற்கெனவே பணி எடுக்கப்பட்டு முடிக்கப்பட்டிருக்கின்றது என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு. ப. இளவழகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. கடந்த 40 ஆண்டு காலமாக புள்ளம்பாடி கால்வாய். தூர்வாரப்பட வேண்டுமென்ற விவசாயிகளினுடைய நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்றி, விவசாயிகளுக்குப் பேருதவி புரிந்த மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் தொகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் புள்ளம்பாடி கால்வாயில், புள்ளம்பாடி அருகில், கூடலூர் என்கின்ற கிராமத்தினுடைய அருகிலே, மானோடை மற்றும் நந்தையாறுகளில் செல்லக்கூடிய வெள்ள நீர் வீணாகச் சென்று கொள்ளிடத்திலே கலக்கின்றது. இந்தத் தண்ணீர் விவசாயத்திற்கு எந்தப் பலனும் இல்லாமல் வீணாகச் செல்கிறது. இந்தத் தண்ணீரைப் புள்ளம்பாடி கால்வாயில் பாசனத்திற்குப் பயன்படக்கூடிய வகையிலே திருப்ப ஏற்பாடுகள் செய்தால். கிட்டத்தட்ட 30,000 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொண்டு. அந்தப் பணி மேற்கொள்ளப்படுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புள்ளம்பாடி வாய்க்காலின் மொத்த நீளம் 52 மைல்கள். 2 பர்லாங் ஆகும். இவ்வாய்க்காலில் செல்லக்கூடிய நீரின் அளவு, வினாடிக்கு 978 கன அடியாகும். இவ்வாய்க்கால், திருச்சி மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் 72,114 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கிறது. இவ்வாய்க்காலின் 26–வது மைலில் கூடலூர் என்னும் கிராமத்தில் மழை நீர் சுமார் 581 கன அடியில் ஒரு பகுதி, வாய்க்காலில் கலக்கிறது. மீதி மழை நீர், வாய்க்காலின் குறுக்கே கட்டப்பட்டுள்ள நீர்க் கடத்தி வழியாக, மானோடையை அடைந்து இறுதியாக கொள்ளிடம் ஆற்றைச் சென்று அடைகிறது. இந்த முழு மழை நீரையும், ஏற்கெனவே புள்ளம்பாடி வாய்க்காலில் வரும் மழை நீருடன் சேர்த்துத் திருப்பிவிட்டால், வாய்க்காலின் கொள்ளளவு போதாது. எனவே, இவ்வாய்க்காலில் ஏற்கெனவே உள்ள கட்டுமான அமைப்புகள்

2004 ஜூலை 30]

போதுமானதாக இல்லை. எனவே, முழு அளவு மழை நீரையும் புள்ளம்பாடி வாய்க்காலிலே திருப்பிவிட தொழில்நுட்ப ரீதியாக சாத்தியக்கூறுகள் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. லா. சந்தானம் அவர்கள்.

திரு. லா. சந்தானம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கால்வாய்கள், ஏரிகள் தூர்வாருகின்ற பணி சென்ற ஆண்டிலே, வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் நடைபெற்றது. உணவுக்கு வேலை என்கின்ற அடிப்படையில் 25 சதவீதம் பணமாகவும், 75 சதவீதம் அரிசியாகவும் வழங்குவது என்றவகையில், பொதுப் பணித் துறையின்மூலம் தமிழ்நாடு முழுமையும் பல்வேறு குளங்களும், ஏரிகளும், வாய்க்கால்களும் தூர்வாரப்பட்டன. ஆனால் அதற்குரிய அரிசி, இன்னும் வழங்கப்படவில்லை என்கின்ற நிலை இருப்பதை அரசு அறியுமா? அதற்கு என்ன நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தங்கள்மூலம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு வறட்சியின் காரணமாக வேலைக்கு உணவு என்ற திட்டத்தினை, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்து, கிராமங்களில் இருக்கின்ற வேலை இல்லாத விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை வழங்கும்பொருட்டு, அங்கே இருக்கின்ற குளங்கள், ஏரிகள், வரத்து வாய்க்கால்கள் தூர்வாரப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதில், அரசினுடைய கவனத்திற்கு, கணக்கிற்கு இன்னும் முழு அளவினுடைய, வேலையினுடைய பணி வந்து சேரவில்லை. ஒவ்வொரு மாவட்டத்திலும் கோட்டாட்சியரினுடைய தலைமையில், அந்தப் பணிகள் எடுக்கப்பட்டு முடிக்கப்பட்டிருக்கின்ற விவரங்கள் சேகரிக்கப்பட்டு, அரசுக்கு வந்து கொண்டிருக்கின்றன. அரசுக்கு முழுமையாக வந்து சேர்ந்தவுடன் அவர்களுக்கு உரிய உணவோ, அரிசியோ, பணமோ வழங்கப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 82, திருமதி மல்லிகா சின்னசாமி, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.